போகிறதா, கோர்ட்டுக்குப் போகிறபோது சாமிகள் மீது வழக்குப் போடப் படுகிறதா அல்லது அவர்கள் சாட்சிக்கு அழைக்கப்படுகின்றனரா என்ற விவரத்தை அளிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : அது சம்பந்தமான தகவல இல்லே.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : சிலேகள் திருட்டுப் போவதாகச் சொன்ஞர்கள். இந்தச் சிலேகள் திருட்டுப்போவது அதன் உலோகங் களுக்காகத் திருட்டு போகிறதா அல்லது வெளிநாடுகளில் புராதன சிற்பங்களேச் சேகரிக்கிறவர்கள் அதிக விலேக்கு வாங்கிச் சேர்க்கிருர்கள் என்று சொல்கிருர்கள், ஆகவே அதன் காரணமாகத் திருடு போகிறதா? எந்த நோக்கத்தோடு இவை திருடப்படுகின்றன என்பது கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : பல்வேறுகப் பேசப்படுகிறது என்று உறுப்பினர் அவர்கள் சொன்ஞர்கள். ஆனுல், திருடுபோவது எதற்காக என்பது பற்றி என்னிடம் தகவல் இல்லே.

மரக்காணம் பூமலிங்கீஸ்வரர் தேவஸ்தானம்.

***554 வின.—திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு அறநிலேய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவிற்கு விடையளிப்பாரா—

தென்ஞற்காடு மாவட்டம், மரக்காணம் பூமலிங்கீஸ்வரர் தேவஸ்தான நிர்வாக தர்மகர்த்தாவின் மீது செய்யப்பட்ட புகார் எந்த நிலேயிலுள்ளது?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இது குறித்து சென்னே, இந்து சமய அறக்கட்டளேகள் ஆணேயாளர் 27—11—1968 தேதியன்று விசாரணே ஒன்றை நடத்திஞர். ஸ்ரீ பூமீஸ்வரர் கோவிலின் பரம்பரை அறங்காவலர் கோயில் அலுவல்களேச் சரியான முறையில் நிர்வகித்து வராததன் காரண மாக கோயில் பணி ஒழுங்காக நடைபெறுவது தடைப்பட்டது. எனவே, தமிழ்நாடு 1959-ம் ஆண்டு இந்து சமய-அறக் கட்டளேகள் சட்டத்தின் 45 (1) பிரிவின் கீழ் ஆணேயாளர் நிர்வாக அதிகாரி ஒருவரை நியமித்தார். கோயிலின் பொறுப்பு, பதிவேடுகள் முதலியவற்றைப் புதிதாக நியமிக்கப்பட்ட நிர்வாக அதிகாரியிடம் ஒப்படைக்க வேண்டு மென்றும் பரம்பரை அறங்காவலருக்கு உத்திரவிடப்பட்டுள்ளது.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலேவரவர்களே, அந்தப் பரம்பரை அறங்காவலர் அவர்கள் நீண்ட நாட்களாக அங்கேயிருந்து வந்ததன் பேரில் நிறைய பணம் கையாடப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டு இருந்து வருவதும், அதன் காரணமாக ஏறக்குறைய நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு முன்ஞலேயே அவர் பேரிலே புகார் செய்யப்பட்டு அந்தப் புகாரை விசாரிப்பதற்கு அவர் முன்ஞல் அமைச்சர் ஒருவரின் நெருங்கிய உறவினர் என்ற அந்தக் காரணத்திஞல் நடவடிக்கை எடுக்கப்படவில்லே என்று கூறப்படுவதும் உண்மையா ? இப்பொழுதும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : அவர் மீது என் நடவடிக்கை எடுக்கப்படவில்லே என்பதற்கு என்னிடத்தில் தகவல் இல்லே. ஆஞல் அவர் பரம்பரை அறங்காவலராக இருந்து கோவில் சரியானபடி நிர்வகிக்க கப்படவில்லே என்ற காரணத்திஞல் அவர் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டு, அதற்காக ஒரு அதிகாரியையும் அந்தக் கோயிலுக்கு நியமனம் செய்து உத்தரவு செய்யப்பட்டிருக்கிறது.

ஒரு யூனிட் மின்சாரத்தின் அடக்க விலே.

***548 விஞ.—திரு. எஸ். அக்கினிராஜு :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்திலுள்ள சமயநல்லூர் அனல் மின்சார நிலேயத்தில் உற்பத்தியாகும் மின்சாரம் 1 யூனிட்டின் அடக்க விலே என்ன ?

(இ) நீர்வீழ்ச்சியின் மூலமாக உற்பத்தியாகும் மின்சாரம் 1 யூனிட்டின் அடக்க விலை என்ன ?

மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன் : (அ) யூனிட்டுக்கு 12·3 காசு.

(இ) யூனிட்டுக்கு 2·6 காசு.

Confidential report of N.G.G.Os.

* 491 *Q.*—DR. H.V. HANDE
THIRU N. S. V. CHITHAN :
THIRU K. VINAYAKAM :
THIRU S. ALAGIRISAMY
} Will the Hon. the Chief Minister be pleased to state.—

(*a*) whether it is proposed to discontinue or change the system of maintaining confidential reports of N.G.G.Os. ; and

(*b*) if so, the detials thereof ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) and (இ) அரசுப் பணியாளர் சங்கங்கள் நிறைவேற்றிய தீர்மானங்களிலும் பத்திரிக்கைகளில் வெளியான கடிதங்களிலும் கட்டுரைகளிலும் இது குறித்துச் சில கருத்துரைகள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

இவற்றை அரசாங்கம் நாட்டத்தில் கொண்டுள்ளது. தேவையென்று கருதும் அளவிற்கு இம்முறையைச் சீர்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : சார், இந்தத் தலைமை அதிகாரிகள் மற்றும் பெரிய பெரிய உயர்ந்த அதிகாரிகள், சிறிய அதிகாரிகளோ அல்லது என். ஜி. ஓக்களோ அவர்கள் செய்யும் பணி சரியாக இல்லை என்றாலோ, அல்லது அவர்கள் மீது குற்றங்குறைகள் இருந்தாலோ, இந்த இரகசியக் குறிப்பில் எழுதப்பட்டு மீண்டும் அந்த அதிகாரிக்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டுமென்று முறையிருந்தாலும் கூட, பல்வேறு இலாக்காக்களிலே இது சரியான முறையில் கையாளாமல் கடைபிடிக்காமல் இருக்கிறார்கள். அப்படியிருப்பதால் நிரம்ப அதிகாரிகள் இதனால் பாதிக்கப்படுகிறார்கள் என்று அரசாங்கம் உணருகிறதா ? அப்படியிருந்தால் அப்படி உணருகிறார்கள் என்றால், உடனடியாக இதற்குத் திட்டவட்டமான உத்தரவு போட்டு இப்படிப்பட்ட இரகசியக் குறிப்பு தேவையில்லை என்று ஒரு உத்தரவைப் போடத் தயாராக இருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இரகசியக் குறிப்பு தேவையில்லை என்று அரசாங்கம் உத்தரவு போடுவதற்குத் தயாராக இல்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அதிகாரிகள் மீது எழுதப்படுகின்ற குறைகள் உடனடியாக அவருக்குத் தெரிவிக்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அப்படித் தெரிவிக்கப்படுகிறது என்பதற்கு முறையிருந்தாலும் அப்படித் தெரிவிக்கப்படுகிற முறை நடப்பில் இல்லை என்று சொன்னார்கள். அந்த முறையில் தெரிவிக்கப்படாமல் இருந்தால் அது உடனடியாகத் தெரிவிக்கப்பட வேண்டுமென்றும் நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. கே. விநாயகம் : நமது அரசில் உத்தியோகம் செய்கிற அதிகாரிகளைப்பற்றி இப்பேர்ப்பட்ட இரகசியக் குறிப்பு தேவையற்றது என்று இன்றைய தலைமைச் செயலக சீஃப் செக்ரடரி, உயர்ந்த அலுவலர் இதுமாதிரி ஒரு கருத்தை ஒரு மாநாட்டில் வெளிப்படுத்தி இருக்கிறார்களா ? அப்படி அவர் வெளிப்படுத்தியிருந்தால் அது ஆட்சியின் அனுமதியைப் பெற்றா அல்லது தனிப்பட்டவருடைய கருத்தா ? இதைப்பற்றி ஆட்சி யோசித்து இருக்கிறதா ? இதைப்பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?